கௌதம் பதிப்பகம்
பேசி: +91-96888-29900 www.gowthampathippagam.com

# தீபம் நா. பார்த்தசாரதியின் படைப்புகள்

# பொய்ம் முகங்கள்

## 28

சுதர்சனன் ஏறிக்கொண்ட சைக்கிள் ரிக்ஷா பைகிராப்ட்ஸ் சாலையில் திரும்பி ஓடிப் பெரிய தெரு என்ற குறுகலான சிறிய தெருவுக்குள் நிழைந்தபோது அந்தத் தெருவில் வெள்ளம் போல் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. காய்கறி, பழவண்டிகளின் நெரிசலுக்கும் குறைவில்லை. சுதர்சனன் 'அழகு லாட்ஜ் - ரூம்கள் மாத வாடகைக்கு விடப்படும்' - என்ற புது போர்டைப் பார்த்து ரிக்ஷாவை நிறுத்தச் சொன்னான். புதிதாக ஒரு வீட்டை வாங்கி இடித்து மூன்று மாடிக் கட்டிடமாகக் கட்டி லாட்ஜ் ஆக்கியிருந்தார்கள். பொதுவாகத் திருவல்லிக்கேணியில் பெல்ஸ் ரோடு, பெரிய தெரு முதலிய சுறுசுறுப்பான பகுதிகளில் இப்படி ஒரு போர்டைக் காண முடிவதே அபூர்வம்தான். ஓர் அறையோ, அல்லது அறையில் ஒரு படுக்கையோ காலியாக இருந்தால்கூட உடனே யாராவது தேடி வந்துவிடுவார்கள். ஒரு வீடு காலியாகிறது அல்லது அறையிலிருப்பவர் ஒழித்துக்கொண்டு போகிறார் என்று தகவல் தெரிந்தவுடனேயே பத்துப் பேர் அட்வான்ஸோடு தயாராக வந்து காத்துக்கொண்டிருக்கிற பகுதி அது. அங்கே இடம் கிடைப்பது அவ்வளவு சிரமம்.

முதலில் உள்ளே போய் விசாரித்துக் கொண்டு அப்புறம் அவசியமானால் வந்து பெட்டி படுக்கையை எடுத்துக் கொள்ளலாம் என்று உள்ளே போய் விசாரித்த சுதர்சனனிடம் பதிலுக்கு ஒரு டஜன் கேள்விகளைக் கேட்டார் லாட்ஜ்காரர். ஒரு டஜன் கேள்விகளுக்கும் பொறுமையாக மறுமொழி கூறிய பின் மூன்றாவது மாடியில் ஓர் அறையில் ஒரு படுக்கை காலி இருப்பதாகவும் - மாத வாடகை ரூ. ஐம்பது என்றும் - மூன்று மாத வாடகை அட்வான்ஸாக தந்துவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. திருவல்லிக்கேணியின் வசதிகள் நகரின் பிற பகுதிகளில் இல்லை என்பதைச் சுதர்சனன் நன்றாக உணர்ந்திருந்தான். கடற்கரை நடந்து போய்த் திரும்புகிற தொலைவில் அருகே இருந்தது. தனிக் கட்டைகளான திருமணமாகாதவர்கள் சாப்பிடுவதற்கு வசதியான 'மெஸ்'கள் திருவல்லிக்கேணியில் நிரம்ப இருந்தன. நகரின் எல்லாப் பகுதிக்கும் போய்வர பஸ் வசதிகள் அருகருகே இருந்தன.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com,
www.gowthampathippagam.com, www.dharanish.in

நல்லவேளையாக அவனிடம் அப்போது நூற்றைம்பது ரூபாய் பணம் கைவசம் இருந்தது. மறுபேச்சுப் பேசாமல் நூற்றைம்பது ரூபாயை எடுத்து லாட்ஜ்காரரிடம் நீட்டினான் அவன்.

“எதுக்கும் உங்களுக்குப் பிடிக்கறதா இல்லியான்னு அறையைப் போய்ப் பார்த்துட்டு வந்துடுங்களேன்.”

“அவசியமில்லை. நீங்க சொன்னாச் சரிதான்.”

திரும்பத் தெருவுக்கு வந்து ரிக்ஷாக்காரனுக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டுப் பெட்டி படுக்கையோடு அழகு லாட்ஜுக்குள் நுழைந்தான் சுதர்சனன். அழகு லாட்ஜில், லிஃப்ட் கிடையாது. மூன்றாவது மாடிக்குப் படி ஏறி நடந்துதான் போக வேண்டியிருந்தது. அறையின் பொதுவான பூட்டுக்கு மொத்தம் மூன்று சாவிகள் உண்டு என்றும், மற்ற இரண்டு சாவிகள் மற்றவர்களிடம் இருக்கின்றன என்றும் சொல்லி மூன்றாவது சாவியை அவனிடம் கொடுத்திருந்தார் லாட்ஜ் உரிமையாளர். பெட்டி படுக்கையோடு மூச்சு இரைக்க இரைக்கப் படியேறினான் அவன். அறை திறந்தே இருந்தது. ஒரு படுக்கையில் தடிமன் தடிமனான புத்தகங்களுக்கு இடையே அரும்பு மீசை இளைஞர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். மற்றொரு படுக்கையில் ஒரே மருந்துப் புட்டிகள், அட்டை டப்பாக்கள், லேபிள்கள், அச்சடித்த, பாம்ப்லெட்டுகள் மயமாக இருந்தன. மூன்றாவது படுக்கை காலியாயிருந்தது. சுதர்சனன் அறையிலிருந்த இளைஞருக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, மூன்றாவது அறைவாசியாக வந்திருப்பதாய்த் தெரிவித்தவுடன் காலியாயிருந்த படுக்கையைச் சுட்டிக் காட்டினார் இளைஞர். சுதர்சனன் விசாரித்தான்: “நீங்க எங்கே வேலை பார்க்கிறீங்க? என்ன செய்யிறீங்க? நான் தெரிஞ்சுக்கலாமா? நான் என்னைப்பத்தி உங்களுக்குச் சொல்லி யாச்சு, இப்போ நீங்க தான் உங்களைப்பத்தி எனக்குச் சொல்லணும்.”

“யான் ஆராய்ச்சி மாணவன். தமிழ் முதுகலை முதல் வகுப்பில் தேறியபின் இப்போழ்துப் பண்டாரகர்பட்டம் பெறுவான் வேண்டிப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்துள்ளேன். பெயர் ஆறை அண்ணாதாசன். ஊர் ஆற்றூர்.”

எதிரே தெரிந்த கண், முகம், மூக்கு, வாய், காது. முதலிய மனித உறுப்புக்கள் எல்லாமே கரைந்துபோய், ஒரு புத்தகம் பெரிய உருப்பெற்றுத் திடீரென்று எதிரே வந்து நின்று வாய் திறந்து பேசினாற் போலிருந்தது. அவர் ஒரு தனித் தமிழ்வாதியாயிருக்க வேண்டும் என்று சுதர்சனனுக்குப் புரிந்தது.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com,
www.gowthampathippagam.com, www.dharanish.in

“இந்தப் படுக்கையிலே இருக்கறது யாருங்க?”

“அவர் ஒரு மருந்தாற்றுப் படுத்துநர்...”

“அப்படீன்னா? என்னது? புரியலீங்களே?”

“ஆங்கிலத்தில் ‘மெடிகல் ரெப்ரஸெண்டிடிவ்’ என்பார்கள். நீங்கள் ஒரு தமிழாசிரியர் என்று உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டீர்கள். இருந்தும் இவை எல்லாம் உங்களுக்குப் புரியாதது வியப்புக்குரியது.”

“நான் படிச்ச தமிழிலே இதெல்லாம் இல்லியே...? புதுசாப் பலபேர் பலவிதமா இப்பல்லாம் அவிச்சுக் கொட்ற வார்த்தைங்க ஒவ்வொண்ணும் ஒவ்வொரு விதமா இருக்குதே?”

“எல்லாம் தமிழிலேயே இயலவேண்டும்.”

“நல்லதுங்க... உங்க பேர்லே தாசன்னு எப்பிடி வரவிட் டீங்க?”

“ஏன்? அதிலென்ன பிழை?”

“அது தமிழ் வார்த்தை இல்லியே? தெரியாதா உங்க ளுக்கு?”

“யார் சொன்னார்கள்? அது சாலவும் தமிழ் வார்த் தையே” - சுதர்சனனுக்கு ஆச்சரியமாயிருந்தது. எம்.ஏ. முதல் வகுப்பில் தேறிவிட்டு பி.எச்.டி-க்கு ஆராய்ச்சி செய்யும் ஒருத்தருக்கு, எது தமிழ் வார்த்தை, எது தமிழ் வார்த்தையில்லை என்பது கூடச் சரியாகத் தெரியவில்லையே என்பது வேடிக்கையாயிருந்ததுடன் தாங்க முடியாத வேதனையையும் அளித்தது.

“ஒரு மொழி தமிழா, தமிழில்லையான்னு கண்டு பிடிக்கத் தமிழ் மட்டுமாவது நல்லாத் தெரிஞ்சிருக்கணும். அல்லது வேறே சில மொழிகளும் கொஞ்சமாவது கூடத் தெரிஞ்சிருக்கணும். இரண்டுமே சரியாத் தெரியாமே...?”

சுதர்சனன் கூறியது ஆறை அண்ணாதாசனுக்கு எரிச்சல் ஊட்டியது போலும். அவனே, பேச்சை உடனே முடித்து விட்டான்; “நீங்கள் இப்போதுதான் வந்திருக்கிறீர்கள். முதலில் உங்கள் பொருள்களை நிரல்பட வைத்துக் கொண்டு அறையில் அமைக. பின்பு நாம் ஓய்வாக உரையாடலாம்” - என்று அவனிடமிருந்து சுதர்சனனுக்குப் பதில் வந்தது.

“நம்ம ரூம் மேட் - அதான் இந்த மெடிகல் ரெப்ரஸண்டிடிவ் ஊர்லே இல்லீங்களா?”

“மருந்தாற்றுப்படுத்துநர் வெளியூர் சென்றுள்ளார். இனி மறுபடியும் அவரைக் காணப் பத்து நாட்கள் வரை ஆகலாம்.”



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.gowthampathippagam.com, www.dharanish.in

“மெடிகல் ‘ரெப்ரெலெண்டிடிவ்’ங்கிறத்துக்கு ‘மருந்தாற்றுப்படுத்துநர்’ங்கிறது அவ்வளவு சரியான மொழி பெயர்ப்பாப் படலீங்களே...?”

“யானறிந்த வரையில் அதுவே பொருத்தமான தமிழாக்கம். எம் வழிகாட்டி பண்டாரகர் படுமலையூர்க் கடுமழைக் கண்ணனாரே ஒப்புக் கொண்ட மொழிபெயர்ப்பு அது.”

“இப்பிடி நீங்க ஒரே மொழிபெயர்ப்பாப் பண்ணிக் கிட்டிருந்தீங்கன்னா அப்புறம் மொழி இருக்காது. மொழி பெயர்ப்பு மட்டுந்தான் மீதமிருக்கும்.”

“தமிழுக்காக உயிரையும் விடுவேன்.”

“உயிர் வாழ்ந்தால் தானே தமிழைப் படிக்கலாம். போற்றலாம், பாதுகாக்கலாம். உயிரை விட்டுப்போட்டா அப்புறம் இதெல்லாம் யார் செய்யிறது?”

“சூளுரையைக் குறை கூறாதீர்...”

“சும்மா எடுத்ததுக் கெல்லாம் சூளுரை கூறிக்கிட்டிருந்தா அப்புறம் சூளுரைக்கு மரியாதை எதுவும் இருக்காது. என்னையே எடுத்துக்குங்க தம்பி படிக்கிற வயசிலே, மரியாதை இயக்கத்திலே தீவிரமா இருந்தவன் நான். நாளாக நாளாகத்தான். ‘விஷயங்களை உணர்ச்சி பூர்வமா அணுகியே நமக்குள்ளார முதுகு சொரிஞ்சிக்கிறதிலே பிரயோசனமில்லே. எதையும் அறிவு பூர்வமா - விஞ்ஞான ரீதியா அணுகணும்’னு எனக்குப் புரிஞ்சுது. ரொம்ப அதிகமான கிணத்துத் தவளை மனப்பான்மை நம்மை வளர்க்கவே வளர்க்காது.”

“விஞ்ஞானம் என்று கூறாதீர். ‘மெய்யறிவு’ எனக் கூறுக.”

“என்னத்துக்காகத் தம்பி? இங்கே திரியிற சாமியாருங்களும் தங்களுதை மெய்யறிவுங்கறாங்க. விஞ்ஞானிகளும் மெய்யறிவுங்கிறாங்க. எல்லாத்தையும் ‘மெய்யறிவுன்னே’ சொன்னா வீண் குழப்பம் தான் மிஞ்சும். விஞ்ஞானம் வேறே, மெய்யறிவு வேறே.”

“பண்டாரகர் படுமலையூர்க் கடுமழைக் கண்ணனாரின் ‘தனித் தமிழாற்றுப்படைக் கையேடு’ துணையிருந்தால் எக்குழப்பமும் யாண்டும் எஞ்ஞான்றும் வாராது ஐயா.”

தீப்பெட்டிப் படம் சேர்க்கும் சிறுவனைப் போல், சும்மா வெறும் வார்த்தைகளைக் காமுறும் ஆரம்ப நிலையிலிருந்துகூட விடுபடாத இவனைப் போன்றவர்கள் எம்.ஏ. முதல் வகுப்பில் தேறியிருக்கிறார்கள் என்று எண்ணும் போது தமிழ் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியே சுதர்சனனுக்குக் கவலையாயிருந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.gowthampathippagam.com, www.dharanish.in

“உங்க பி.எச்.டி. தீஸிஸுக்கு என்ன ஸ்ப்ஜெட் எடுத்துக்கிட்டிருக்கீங்க தம்பீ...”

“தமிழ் இலக்கியத்தில் காக்கை.”

“வெறும் காக்கைதானா அல்லது ‘காக்கைபிடித்தல்' கூட உண்டா”

சுதர்சனனின் குத்தல் கூட அண்ணாதாசனுக்கு உடனே புரிந்து உறைக்கவில்லை. ரோஷம் வரவில்லை.

“உலகில் எந்த மொழியும் எந்த இலக்கியமும், எந்த இலக்கிய ஆசிரியனும் காணாத அளவு காக்கையைக் கண்டு போற்றியது தமிழ் இலக்கியமே.”

“உலகத்திலே எத்தினி மொழியை நீங்க படிச்சிருக்கீங்க? எத்தினி இலக்கியத்தை நீங்க பார்த்திருக்கீங்க? எத்தினி இலக்கிய ஆசிரியனை நீங்க புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க?”

“என்ன இது? நீங்கள் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவராயிருந்தும் இனவுணர்ச்சி கூட இல்லாது என்னுடன் இப்படிக் கருத்து வேறுபாடு கொள்கிறீர்களே?” என்று உடனே தன்னுடைய பேச்சை வேறுவிதமாகத் திருப்பினான் ஆறை அண்ணாதாசன்.

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.gowthampathippagam.com, www.dharanish.in